[22nd February 1961]

were over and that the Corporation inspection vans be used for this purpose. With reference to rule 10 in Schedule V to the Madras City Municipal Act, the Resolution was sent to the Government for orders. The Government were legally advised that section 25 (*a*) of the Madras City Municipal Act prohibits a Councillor from receiving or being paid from the funds at the disposal of or under the control of the Corporation a salary or other remuneration for services rendered by him in any capacity whatsoever and the provision of free conveyance by the Corporation vans would amount to remuneration within the meaning of the above section of the Act. The Corporation was accordingly informed that the Resolution could not be acted upon; and at the same time a suggestion was commended to the Corporation to the effect that the Corporation vans might perhaps be used for the conveyance of the members on nominal payment.

Sri A. A. RASHEED : Is the Hon. Minister aware that even now inspection vans are used by the councillors to get back to their homes and if so, will it be stopped or will the Government allow them to continue it?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : I am not aware of what the hon. Member has stated. If anything could be done under the rules, we will look into it.

Sri A. A. RASHEED : May I know whether there is any proposal with the Government to pay to the councillors for their transport?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : I have already stated that there is no provision for it.

Sri K. VINAYAKAM : Whereas the City Municipal Act clearly lays down that no conveyance charges or conveyance facilities should be given to the councillors to take them back to their houses, why did the Government use nebulous terms like "vans may be or might be or could be used" which only gives them an opportunity of using those vans?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : It might be used only on nominal payment and not free.

Leprosy Centres

* 395 *Q.*—Sri S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. SARATHI) : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-ல் இந்த ராஜ்யத்தில் லெப்ரஸி ஸானிடோரியம், லெப்ரஸி ஸென்டர்கள் எங்கெங்கு உள்ளன?

The Hon. Sri M. A. MANICKAVELU : A statement [a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix I on pages 242–243 infra.

22nd February 1961]

SRI S. M. ANNAMALAI : இந்த லெபரஸி சென்டர்ஸ் எந்த அடிப்படையில் ஏற்படுத்தப்படுகிறது? சர்வே செய்யப்பட்டு எந்தெந்த இடங்களில் லெப்ரஸி அதிகமாக இருக்கிறதோ அந்தந்த யிடங்களில் ஆரம்பிக்கப்படுகிறதா? அல்லது சிபார்சுகளின்மீது ஆரம்பிக்கப்படுகிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : நோயாளிகள் எங்கு அதிகமாக இருக்கிறார்களோ அங்கு வைக்கப்படுகிறது. அதை சிபார்சு என்று அங்கத்தினர் அவர்கள் கருதினால் அதை சிபார்சு என்று எடுத்துக் கொள்ளலாம்.

SRI K. R. NALLASIVAM : குஷ்டரோகிகள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று சர்வே செய்யப்பட்டிருக்கிறதா? இல்லையானால், குஷ்டரோக நிவாரண ஆஸ்பத்திரிகள் உள்ளயிடங்களில், அந்தந்த வட்டாரங்களில் சர்வே செய்ய ஏதாவது ஏற்பாடு செய்கிறார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : சர்வே செய்வதற்கு இப்பொழுது பிரயத்தனம் செய்யப்படுகிறது. வாலாஜா ஸ்கீம் என்றிருக்கிறது. அதில் சர்வே எடுக்கப்படுகிறது. மற்றயிடங்களிலும் கூடுமானவரையிலும் எடுக்கிறோம். முன்பு இல்லை, இப்பொழுது சர்வேக்கு ஏற்பாடு செய்கிறார்கள்.

SRI G. G. GURUMURTHI : லெப்ரஸி சென்டர்ஸ் பொறுத்த வரையில் மாகாணம் பூராவும் சர்வே செய்து மேற்கொண்டு, இவ் வியாதி அதிகமாகயுள்ள இடங்களில் புதிய சென்டர்கள் ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : மூன்றாவது திட்டத்தில் பெரிய அளவில் இந்த நோயைப் போக்க பணம் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படும்.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த தொழு நோய் ஒரு தொத்து நோயாக இருப்பதால், எல்லா சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலும் அனுமதித்து இதற்கு சிகிச்சை கொடுப்பதை தடுத்து அதற்காக தனியாக இருக்ககூடிய சானிட்டோரியம், ஆஸ்பத்திரி போன்றவைகள் அமைத்து சிகிச்சை கொடுக்க ஏற்பாடு செய்யப் படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இது, மற்ற நோய்களைப்போல் ஒரு நோய். ஆகவே எல்லாயிடங்களிலும் சிகிச்சைக்கு வசதி ஏற்படுத்த வேண்டுமென்ற முறையிருக்கிறது. தொத்து நோய் என்றால், இது நிதானமான தொத்து நோய். சிக்கிரத்தில் தொத்தி விடுவதில்லை.

[22nd February 1961

SRI S. NAGARAJA MONEGAR: இந்த வியாதியைத் தடுப்பதற்கு, சிகிச்சை முறைகளை அனுசரிப்பதற்கு இந்த மாகாணம் பூராவும் பராமரிப்பதற்கு டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்விஸஸ்-ஐ தவிர தனியாக ஏதாவது அதிகாரியிருக்கிறாரா? அப்படியானால் அவர் யார்?

THE HON. SRI M. A. MANICKAVELU: ஸ்டேட் லெப்ரஸி அதிகாரி என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI A. VEDARATHNAM: ப்ரைவேட்டாக நடத்தப்படுகிற ஸ்தாபனங்களுக்கு அரசாங்கம் என்ன உதவி அளிக்கிறது? இங்கு சர்வே செய்யப்பட்டதில் "என்டமிக் ஏரியா" என்று எந்தெந்த பகுதிகளை டிக்ளேர் செய்திருக்கிறார்கள்? அதில் அரசாங்க ஸ்தாபனங்களை அல்லது ப்ரைவேட் ஸ்தாபனங்களை அதிகரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU: ப்ரைவேட் இன்ஸ்டிட்யூஷன்ஸ் நல்ல சேவை செய்திருக்கிறார்கள். இதற்காக அரசாங்கமும் அவ்வப்போது உதவி செய்கிறது. மத்திய அரசாங்கமும் உதவி செய்கிறது. மாகாணத்தில் ரொம்ப அதிகமாக இருக்கிற இடம் தென் ஆற்காடு ஜில்லா.

SRI K. B. S. MANI: இந்த வியாதி மிகவும் சீக்கிரமாக பரவக் கூடியது என்ற முறையிலும், அரசாங்கத்தினால் அதிகமான தொகை இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற முறையிலும், எல்லா குஷ்டரோகிகளும் கட்டாயமாக சிகிச்சை பெறவேண்டும், என்ற முறையிலும் ஆங்காங்குள்ள போலீஸ் இலாகா அதிகாரிகள் அல்லது ஹெல்த் டிப்பார்ட்மென்ட் அதிகாரிகள் அவர்களைப் பிடித்து கட்டாயமாக சிகிச்சை செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அவர்களைப் பிடித்து கட்டாயமாக சிகிச்சை செய்வதென்றால் எல்லோரும் ஓடிப் போய் விடுவார்கள். "பெர்ஸுவேஷன்" மூலம் இதை நல்ல முறையில் செய்யலாம். இப்பொழுது நிறையப் பேர்கள் வருகிறார்கள். முன்பெல்லாம் இது பீடித்தவர்கள் பதுங்கிக் கொண்டிருந்தார்கள், வெளியே வர வெட்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இது மற்ற நோய்களைப் போன்றதுதான் என்று சொன்னதால், இப்பொழுது பகிரங்கமாக வருகிறார்கள். அதிக அளவில் இப்பொழுது சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது.

SRIMATHI A. S. PONNAMMAL: லெப்ரஸி இருக்கும் ஒருசில இடங்களில் செஞ்சிலுவை சங்கம் மூலம் பணம் வசூல் செய்து ஊசி போட்டுகொண்டு வருகிறார்கள். பணம் பற்றாமல் இருப்பதால் அவர்கள் அரசாங்கத்திற்கு மனு போட்டால் அவர்களுக்கு ஏதாவது மான்யம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: மனு போட்டால் அப்பொழுது அதை கவனிக்கலாம்.

22nd February 1961]

SRI N. K. PALANISAMI : எங்கள் பகுதியில் குஷ்டரோகம் ஹரிஜனங்கள் மத்தியில் அதிகமாகயிருக்கிறது. அவர்களுக்கு தெரிவதில்லை இது குஷ்டரோகம் என்று. யார்ட்களுக்கு போனால் பரிசிலனை செய்து சிகிச்சை செய்கிறார்கள். கிராமப் பகுதிகளுக்குச் சென்று சர்வே செய்து யார் யார் இந்த வியாதி யால் பீடிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு சிகிச்சை கொடுக்கும் முறையில் இப்பொழுது நடைமுறையில் உள்ள விதிகளை மாற்ற சர்க்கார் உத்தரவிடுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த நோயைப் பொறுத்தமட்டில் ஹரிஜன்ஸ், நான்-ஹரிஜன்ஸ் என்று அது "டிஸ்கிரிமினேட்" செய்வதில்லை. எல்லோருக்கும் இருக்கிறது. புதுத்திட்டப் பிரகாரம் இந்த குஷ்டரோகத்தை ஒழிக்க வேண்டு மென்று எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

SRI P. G. KARUTHIRUMAN : "லூக்கோடர்மா" என்ற வியாதி இருக்கிறது. அதை குஷ்டரோகம் என்று பலர் நினைக் கிறார்கள். ஆனால் அது குஷ்டரோகம் இல்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா? குஷ்டரோகத்தை பூர்ணமாக, ட்யூபர்-கிளோசிசைப் போன்று தடுத்து விடமுடியும் என்பதும் சர்க்கா ருக்குத் தெரியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அங்கத்தினர் அவர் களுக்கு தெரியும்போது இவையெல்லாம் சர்க்காருக்கு நன்றாகத் தெரியும்.

T.B. Chemotherapy Project

MR. SPEAKER : As the hon. Member, who gave notice of qestion No. 396 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 396 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the details regarding the working of Tuberculosis Chemotherapy Project in our State; and

(*b*) the nature and type of the aid received from W.H.O. and B.M.R.C.

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

Grand Anicut Canal

* 397 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the supply of water in the tail-end areas of the Grand Anicut Canal System in Pattukkottai and Aranthangi taluks is adequate;

---

a Printed as Appendix II on page 243–246 infra.